**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI**
**OS No.81/2019**

**2025**ம் வருடம் அக்டோபர் திங்கள் 24ம் நாள் வாதி தரப்பில் 2வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10வது விதியின் படி திருமதி.சேதுராணி, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : நல்லார் (PW1) கிராமம் :

தந்தை / கணவர் பெயர் : தொழில் :

வயது :

<u>வாதி தரப்பில் முதன்மை விசாரணை</u>:

1. நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை படித்துப் பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணை வாக்குமூலமாக ஏற்றுக்கொள்ள பிராத்திக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

2. கடந்த 24.09.1999ந் தேதி தாவா சொத்து உள்ளிட்ட மொத்தச்சொத்துக்களுக்கும் 1ம் பிரதிவாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் மக்களான வாதியின் தகப்பனார் கருப்பையா, கந்தசாமி, மற்றும் பொன்னுத்தாய் ஆகியோர்களுக்கு வழங்கப்பட்ட பட்டா மாறுதல் உத்திரவு அசல் வா.சா.ஆ.1 ஆகும்.

3. கடந்த 21.01.2011ந் தேதி தாவாச்சொத்தின் கீழ்பாதியை கந்தசாமியிடமிருந்து வாதி கிரையம் பெற்றதற்கான பத்திரம் அசல் வா.சா.ஆ.2 ஆகும்.

4. கடந்த 02.02.2016ந் தேதி தாவா சொத்தின் கீழ்பாதியை கந்தசாமியிடமிருந்து வாதி கிரையம் பெற்றதற்கான பத்திரத்தின் சீர்திருத்தல் பத்திரம் அசல் வா.சா.ஆ.3 ஆகும்.

5. தாவா சொத்துக்கு வாதிக்கு வழங்கப்பட்ட கணினி பட்டாக்கள் – 2 அசல் வா.சா.ஆ.4 ஆகும்.

6. தாவா சொத்துக்களுக்கு வாதி பெயரில் சான்றிட்ட நகல் வழங்கப்பட்ட

சாகுபடி அடங்கல் கணக்கு வா.சா.ஆ.5 ஆகும்.

7. கடந்த 30.11.2015 ந் தேதி பரமக்குடி சார் ஆட்சியரின் உத்தரவு அசல் வா.சா.ஆ.6 ஆகும்.

8. கடந்த 12.02.2024 ந் தேதி இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.36/2021 ல் ஏற்பட்ட தீர்ப்பாணை நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7 ஆகும்.

9. கடந்த 12.02.2024 ந் தேதி இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.36/2021 ல் ஏற்பட்ட தீர்ப்புரை நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8 ஆகும்.

10. கடந்த 01.08.2023 ந் தேதி இந்நீதிமன்ற அசல் வழக்கு எண்.36/2021 ல் 1 ம் வாதியின் குறுக்கு விசாரணை கணினி நகல் வா.சா.ஆ.9 ஆகும்.

பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி